# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-12 July-2022 Issue-02

Price Rs.5-00 Annual Subscription Rs.60/-

# இயேசுவில் வேர்கொண்ட குடும்பம்





நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் நடந்துகொண்டு, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. கொலோ–2: 6,7

As you have received Christ the Lord, so walk you in him; rooted and built up in him, and stablished in the faith, abounding therein with thanksgiving. Col-2: 6, 7

**Accept Jesus Christ as the companion of your family**

## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த சில வாரங்களாக கொரோனா பெருந் தொற்றின் தாக்கம், தமிழ்நாடு உட்பட நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்து வருவதாகச் செய்திகள் வருகின்றன. உயிர்சேதம் அதிகம் இல்லை, எனினும் பரவல் அதிகமாய் இருப்பதால் முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை கவனமாய்க் கடைபிடிக்க அறிவுறுத் தப்படுகிறோம். வணிகக்கூடங்கள், கல்விக்கூடங்கள், சமூகக்கூடங்கள் மற்றும் தொழுகைக் கூடங்கள் மீண்டும் மூடப்படாதபடிக்கு பெருந்தொற்று பேரலையாக மாறாதபடி நாம் கருத்தாய் ஜெபிப் போம். இந்த கல்வியாண்டில் நம் பிள்ளைகள் புதிய வகுப்புகளுக்குச் செல்ல கிருபைசெய்த கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். மட்டுமல்ல, தேர்வில் விரும்பிய முடிவுகள் கிடைக்காத, வெற்றியை தவறவிட்ட பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காய் ஜெபத்துடன் செயல்படுவோம்.

நம் ஊழியங்களுக்கான **RATCHIPPU HOME** என்ற வலைதளம் www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்படுகிறது, தேவனுக்கே மகிமை. மாதந்தோறும் தேவசெய்தி, திருச்சபை-சரிதை, வசன-தியானம், சங்கீத-தியானம், கர்த்தரின்-நாமங்கள், வேசவசன-கதைகள், வேத-வினாக்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை வலைதளத்தில் பதிவேற்றம் செய்கிறோம். இரட்சிப்பு வலைதளத்துக்கு விஜயம்செய்து தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம். இம்மாத 'ஜெப-ஜன்னல்'- ஜெபங்கள் 8, 15, 22 தேதிகளில் நடைபெறும். 'அனைவரும்-ஊழியத்தில்' கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்பட அனைவரை யும் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சி கள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 19-ல்). கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-139** **ஏசாயா-8:18**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

இதோ நானுங் கர்த்தரெனக்குக் கொடுத்த பிள்ளைக ளுஞ் சீயோன் பருவதத்தில் வாசமான சேனைகளுடைய கர்த்த ராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்க ளாகவுமிருக்கிறோம்..

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

இதோ நானும், கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளை களும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனை களின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்க ளாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.

### திருவிவிலியம் (பொது-1995)

படைகளின் ஆண்டவர் சீயோன்மலையில் குடிகொண் டிருக்கிறார்; நானும் ஆண்டவர் எனக்களித்த குழந் தைகளும் இஸ்ரயேலில் அவருக்கு அடையாளங்க ளாகவும் அதிசயங்களாகவும் இருக்கிறோம்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)

இஸ்ரவேல்ல் ஜனங்கள்ன் அடையாளமாகவும், ஆதா ரமாகவும் நானும் எனது பிள்ளைகளும் இருக்கிறோம். சீயோன் மலையில் குடியிருக்கும் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் எங்களை அனுப்பியிருக்கிறார்.

வசன தியானம் - 133

# இயேசுவின் குடும்பம்
# இனிய குடும்பம்

**Isaiah-8:18** ஏசாயா-8:18

இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்
சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே
இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம். ஏசாயா–8:18

21-ம் நூற்றாண்டின் நம் குடும்பங்கள், குழப்பங்களும் போராட்டங்களும் நிறைந்தவை. குறிப்பாக இளைஞர்கள் குடும்பங்களுக்கு பாரமாயிருக்கிறார்கள் என்பது பொதுவான கருத்து. ஆயினும், இளைஞர்களை கடந்து பெற்றோர்கள் மற்றும் அவர்களது வாழ்வைப் பார்க்கும் போது, அங்கேயும் பலவித சீர்கேடுகளை நாம் உணர முடிகிறது. தேவபக்தியுடன் வாழ்வதிலும், நல்வழிகளை போதிப்பதிலும் அவர்கள் தவறி விடுகின்றனர். பெற்றோர் நிலை இவ்வாறு இருக்கும்போது இளைஞர்களை எவ்வாறு குற்றம் சொல்லமுடியும்? எனவே, ஒரு குடும்பத்தில், பெற்றோர்-பிள்ளைகள் உள்ளிட்ட அனைவரும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் நடக்கும்போது தான் அந்தக் குடும்பம் ஆசீர்வாதமான ஒரு குடும்பமாக -கடவுளின் குடும்பமாகக் காணப்படும்.


‘பொறுப்புள்ள, தேவபக்தியுள்ள பெற்றோரை அவர்தம் பிள்ளைகள் தங்கள் வாழ்வில் பிரதிபலிக்கிறார்கள்’ என்பது ஒரு திருமறை அறிஞரின் கூற்று. ஒவ்வொரு தகப்பன் மற்றும் தாய்க்குள் இருக்கும் விசுவாசமே அவர்கள் பிள்ளைகளுக்குள் வேர்கொள்ளும். இவ்வாறு முழுமையாக ஒரு குடும்பம் கர்த்தரில் வேரூன்றி, உத்தமமாக ஜீவித்து, கர்த்தரை சேவிக்கும் போது ஒரு இனிய குடும்பமாக - இயேசுவின் குடும்பமாக விளங்கும் என்பது சத்தியமாகும்.

இஸ்ரவேலிலே, யோசுவாவின் குடும்பம் ஒரு இனிய குடும்பம். நதிக்கு அப்புறத்தில் தேவர்களை சேவித்ததால் இஸ்ரவேலர் குடும்பங்களிலே கர்த்தரின் கோபம் வந்திறங்கிற்று. ஆனால் யோசுவாவின் குடும்பத்தார் கர்த்தரையே சேவித்தனர் (யோசுவா-24:15).

பவுலின் சீடரான தீமோத்தேயுவின் குடும்பம் - இயேசுவின் குடும்பமாகும். தீமோத்தேயுவின் பெற்றோர் விசுவாசிகள் (அப்-16:1,2). தீமோத்தேயு கிறிஸ்துவின் வைராக்கிய விசுவாசி. அவனது பாட்டி லோவிசாள், தாய் ஐனிக்கேயாள் ஆகியோருக்குள் இருந்த மாயமற்ற விசுவாசமே தீமோத்தேயுவுக்குள் நிலைத்ததாக பவுல் கூறுகிறார் (2தீமோ-1:4, 5).

பிரிய விசுவாசிகளே! நம் குடும்பமும் இனிமையான இயேசுவின் குடும்பமாக மாறவேண்டுமானால், நமது குடும்பத்தார் அனைவரும் கிறிஸ்துவுக்குள் வருவது அவசியமாகும்.

“இதோ, நானும் என் குடும்பமும் சீயோனிலே அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்.” (ஏசா-8:18). என்று அறிக்கையிட நம்மால் கூடுமானால் நம் குடும்பங்கள் இயேசுவின் குடும்பங்களாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

மார்த்தாள், மரியாள், லாசரு
நினைவுநாள் சிறப்புதேவசெய்தி...



அருட்திரு
எஸ்.ஜே.டி. தர்மராஜா

# குடும்பத்தின் நண்பரான இயேசு

## The Lord as Companion of Family

பஸ்காபண்டிகைக்கு ஆறுநாளைக்கு முன்னே இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தான். மரியாள் விலையேறப் பெற்ற களங்கம் இல்லாத நளதம் என்னும் தைலத்தைக் எடுத்துவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவர் பாதங்களைத் துடைத்தாள்; வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. யோவான்–12:1,2,3

**Rev. S.J.D. Dharmaraja**
Presbyter and Mission Director
Good Tidings Bible Prints Ministries, Saligramam, Chennai, South India

பெத்தானியாவிலிருந்த ஒரு சிறிய குடும்பம் இயேசுவின் நண்பர்களாக இருந்தனர், இக்குடும்பத்தில், உடன்பிறப்புக்களாகிய மார்த்தாள் மரியாள் லாசரு ஆகியோர் அங்கத்தினர் ஆவர். இயேசுவின் இம்மூவரும் கொண்டிருந்த அன்பின் ஆழம் நற்செய்தி நூல்களில், குறிப்பாக யோவானின் நற்செய்தியில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் இயேசுவுக்குத் தங்கள் வீட்டைத் திறந்தனர். அவர்கள் இல்லத்தில் இயேசுவானவர் தமது ஊழியத்தின்போது புத்துணர்ச்சியைக் கண்டார். மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு ஆகியோரின் நினைவு நாளை இம்மாதம் 29ம் நாள் திருச்சபை ஆசரிப்பதை முன்னிட்டு இக்குடும்பம் இயேசு வோடு கொண்டிருந்த ஐக்கியம் குறித்து தியானிப்பது சிறப்பான ஒன்றாகும்.

மார்த்தாள்: ‘வீட்டு-எஜமானி’ என பொருள்படுவது மார்த்தாளின் பெயர். இவர் உலகக் காரியங்கள் மற்றும் பொறுப்புக்களில் ஆர்வம் நிறைந்தவர். பெத்தானியா இல்லத்தில் ஒவ்வொரு முறையும் இயேசுவுக்கு உணவு பரிமாறுபவர். ஆகையால் இயேசுவின் நட்பையும் மதிப்பையும் பெற்று அனுபவித்தவர். லாசருவின் மரணத் திற்குப் பிறகு இயேசு வந்தபோது தனது விசுவாசத்தை அறிக்கையிட்டவர்.

மரியாள்: ‘கலகக்கார பெண்’ என்ற பொருளுடைய மிரியாமின் பெயரை உடையவர் மரியாள். கடவுளின் ராஜ்யம் குறித்த தெளிவான சிந்தையுடைய ஒரு பெண். பெத்தானியா நண்பகளுள் இயேசுவை அதிகமாக நேசித்த பெண்மணி. இயேசுவின் பாதத்தில் அமர்ந்து

அவருடைய வார்த்தைகளைக் கற்றவர். பஸ்கா பண்டிகைக்கு 6-நாட்களுக்கு முன், இரவு உணவு வேளையில் இவர் இயேசுவை நளதம் என்னும் பரிமளத்தால் அபிஷேகம் செய்து, அவரது அரச-கௌரவம் மற்றும் உயிரத் தியாகம் ஆகியவற்றை அடையாளப்படுத்தியதாக தூய. யோவான் கூறுகிறார் (யோவா-12:3)

லாசரு: பெத்தானியா குடும்பத்தின் தலைவராகிய இவரது பெயரின் பொருள் ‘கர்த்தரின் உதவி’ என்பதாகும். இவர், இயேசுவின் நண்பராகவும், அவரை வரவேற்பவராகவும், அதிகம் பேசாதவராகவும், அமைதியானவராகவும் காட்சியளிக்கிறார். லாசரு ஒரு மாற்றுத்திறனாளி யாக இருக்கலாம் எனவும் பாரம்பரிய செய்தி உண்டு. லாசரு மரணமுற்று மீண்டும் எழுப்பப் பட்டார். இரவு விருந்தில் இயேசுவின் அருகில் அமர்ந்து அவரை உபசரித்தார் என்பது பாரம்பரிய செய்தி. இயேசுவுக்கும் லாசருவுக்கும் உள்ள உறவானது உயிர்-கொடுப்பவருக் கும் உயிர்-பெற்றவருக்கும் இடையேயான பிணைப்பாகும்.

மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோர் இயேசுவின்மேல் கொண்டிருந்த அன்பு விவரிக்க இயலாதது. மட்டுமல்ல இயேசுவானவர் மரியாளின் மீது கொண்டிருந்த தூய-அன்பு, மார்த்தாள் - மரியாள் - இயேசு ஆகிய மூவரும் லாசரு மீது கொண்டிருந்த இணையிலா அன்பு ஆகியவை இந்நண்பர்களின் குணாதிசயங்கயை நிரூபணம் செய்கின்றன.

1. இயேசு - பாசக்காரரை நேசிக்கும் குடும்ப-நண்பர்:

மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரின் பாசத்தில் வாழும் நண்பராக இயேசு காணப்படுகிறார். அவர்கள் தங்கள் ஒன்றுபட்ட அன்பால் இயேசுவை தங்கள் இல்லத்திற்கு வரவேற்பது, குடும்ப காரியங்களை அவரோடு பகிர்வது, அவருக்கு உணவளிப்பது, தங்கள் இல்லத்தில் இடமளிப்பது என அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவருடைய அன்பின் பங்கு இருந்தது. அது ஒரு ஒருங்கிணைந்த அன்பின் முயற்சியாகும். அவர்கள் எப்பொழுதும் இயேசுவைக் குறித்து தங்களுக்குள் பேசி, அவருக்கு உதவிசெய்கிறவர்களாக வாழ்ந்தனர். தேவகுமாரனாகிய கர்த்தரை உபசரிப்பதை அவர்கள் பெரிதாய் எண்ணினர். எனவேதான் இயேசுவும் வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் பெத்தானியாவுக்கு வந்து அவர்கள் இல்லத்தில் தங்கி, போஜனம்பண்ணி, அவர்களது சுக-துக்கங்களை விசாரித்து, அவர்களோடு அளவளாவி மகிழ்ந்தார். இயேசுவை் நண்பராகப் பெற்றது அவர்களது பாக்கியம் ஆயிற்று.

நம் குடும்பத்தில் இயேசுவுக்கு என்ன இடம் தந்துள்ளோம்? அவர் நமது இதய நண்பரா? நாம் பாசத்துக்குரிய குடும்ப நண்பரா? நம்மை நாமே இன்று சுய-பரிசோதனை செய்வோம்.

2. இயேசு - உறவுகளைப் பாதுகாக்கும் குடும்ப-நண்பர்:

இயேசுவை குடும்ப நண்பராகக் பெற்றவர்களின் ஒரு அற்புத அனுபவம் இது. மரணமானது தனது கூர்-முகத்தினால் லாசருவின் குடும்பத்தை உடைத்த அந்த துக்க-சமயத்தில் இயேசு அங்கு வரமுடியாத நிலையில் பின்னர் வந்து சகோதரிகளை விசாரித்தார், தன் இதய அன்பை வெளிப்படுத்தினார். அவர்கள் தங்கள் சகோதரனுக்காக அழுதபோது அவர்களுடன்

இயேசுவும் அழுதார். இறுதியாக, லாசருவை உயிரோடெழுப்பி தமது வல்லமையின் மகத்துவத்தால் குடும்ப உறவுகளை இணைத்தார்.

தேவகுமாரனையே கண்ணீர்விடவைத்த அவர்களது பாசமும், நேசமும் எவ்வளவு பெரியதாக இருந்திருக்கவேண்டும். அதேபோல், இயேசுவின் கண்ணீருக்குப் பின்னால் இருந்த அவரது பாசம் எவ்வளவு ஆழமாக இருந்திருக்கவேண்டும். யூதர்களைக் கூட, ''அவர் லாசருவை எவ்வளாவாய் நேசித்தார்'' (யோவா-11:38) என்று வியக்கவைத்தது இயேசுவின் அன்பு.

இவ்வாறாக, இயேசு தம்மை நேசிக்கிற குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அக்குடும்பங்களை பாதுகாப்பதற்கும் அவர்களோடு இருக்கிறார். குடும்பங்கள் இயேசுவின் நட்பில் இருக்கும்போது அவர்கள் அவருடைய அனுசரணைக்கும், அரவணைப்புக்கும் உரிய வர்கள். துரோகம் மற்றும் வெறுப்பு நிறைந்த இவ்வுலகில் குடும்பத்தின் நண்பராகிய இயேசு மட்டுமே நம்மை பாதுகாக்கிறவர் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

3. இயேசு - ஆத்தும விடுதலை அளிக்கும் குடும்ப-நண்பர்:

மரியாள் ஆவிக்குறிய விடுதலையுடன், இயேசுவுடனான நல்ல பங்கைத் தெரிந்து கொண்டு கடவுளுக்கு சேவை செய்கிறார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த் தெழுதலை அறிவிக்குவண்ணமாக அவருக்கு பரிமள-அபிஷேகம் செய்கிறார். ஆனால், மார்த்தாளோ உலக சேவை மாத்திரம் செய்துவந்தார். எனினும், சகோதரனாகிய லாசருவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் (சரீர - ஆவிக்குறிய உயிர்த்தெழுதல்) தொடர்பாக இயேசுவிடம் உரையாடி, ''நீர்தான் கிறிஸ்து என நான் விசுவாசிக்கிறேன். நீர் உலகத்தில் வருகிறவரான தேவனுடைய குமாரன்'' என அறிக்கையிட்டு ஆத்தும விடுதலையைப் பெற்றுக்கொண்டார் என்பதை வேதம் நமக்குச் சொல்லுகிறது. லாசருவும் கூட, தனது சரீர உயிர்த் தெழுதல் தற்காலிகமானதுதான் எனவும், ஆவிக்குறிய உயிர்த்தெழுதலே மேலானது மற்றும் உன்னத மானது என்பதை உணர்ந்து கொள்ள குடும்ப நண்பரான இயேசுவின் உறவால் வழிநடத்தப் பட்டார் என்பது வேத-சத்தியமாகும்.

ஜெபம்:

பரம பிதாவே! உம் மகனாகிய இயேசு கிறிஸ்து மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோரின் இல்லத்தில் நட்பையும், உபசரிப்பையும், ஓய்வையும் அனுபவித்த செய்தி வழியாய் கொடுத்த சத்தியத்துக்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்மை நேசிக்கும் விருப்பத்தை எங்க ளுக்குத் தாரும். உம் வார்த்தைகளைக் கேட்க எங்கள் செவிகளைத் திறந்து, உமக்கு சேவைசெய்ய எங்கள் கரங்களைத் திடப்படுத்தும். எங்கள் குடும்ப நண்பராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

### நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

**Good Tidings Bible-Prints Ministries**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 3000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.


| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன் படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 62

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 62

Episode - 62

சங்கீதம்: 1 தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும். 2. அவர் என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக் கலமுமானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை. 5. என் ஆத்துமாவே, தேவனை நோக்கி அமர்ந் திரு; நான் நம்புகிறது அவராலே வரும். 6. அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை. 7. என் இரட்சிப்பும், மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. 8. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத் தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். 11. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே. 12. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர். சங்-62:1-2, 5-8, 11-12.

முன்னுரை:-

வாழ்வில் பல காரியங்கள் நம்மை துன்பத்துக்குள் வழிநடத்துகின்றன. சரீரத்திலும், மனதிலும் நாம் பலவிதங்களில் பாதிக்கப்படுகிறோம். பிசாசின் சோதனைகள், பகைவரின் சூழ்ச்சிகள், சரீர வேதனைகள் என நாம் அனைவரும் பல கோணங்களில் தாக்குதலுக்கு உள்ளாகிறோம். அத்தகைய தருணங்களில் நாம் கொண்டிருக்கக்கூடிய சில முக்கிய விஷயங்களை இச்சங்கீதத்தில் தாவீது கோடிட்டுக் காட்டுகிறார். இது நமக்குள் நம்பிக் கையை வளர்க்கும் ஒரு பாடலாக அமைந்துள்ளது. ‘‘தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது, அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப் பும், என் உயர்ந்த அடைக்கலமானவர். நான் (அசைக்கப்பட்டாலும்) அதிகமாய் அசைக்கப் படுவதில்லை’’ (வச-1,2), என்ற தாவீதின் வார்த்தைகள் பிரச்சனைகளின் மத்தியிலும் நாம் கடவுளைச் சார்ந்திருந்தால் அப்பிரச்சனைகள் அனைத்தும் நீங்கிப்போகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. அதை குறிப்பிடும் வகையிலேயே தாவீது மீண்டும் சொல்லும்போது, ‘‘அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கல முமானவர். நான் அசைக்கப்படுவதில்லை’’ என உறுதிபட சொல்கிறதை நாம் வசனம்-6-ல் காண்கிறோம்.

1. கர்த்தரை நம்புங்கள்: (வசனம்-8)

‘‘ஜனங்களே, எக்காலத்திலும் கர்த்தரை நம்புங்கள், அவர் சமுகத்தில் உங்கள் இதயத்தை ஊற்றிவிடுங்கள், தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.’’ மனிதரை நம்பும் அளவுக்கு, ஏன்? கணினி, கைபேசி போன்றவற்றை நம்புகிற அளவுக்குக்கூட நம்மை நேசித்து நமக்காக உயிர்கொடுத்த ஆண்டவரை நாம் நம்புவதில்லை என்பது நம் வாழ்வின் உண்மையாகும்.

உலக காரியங்கள் எல்லாம் பொய்த்துப்போகும்போதுதான் நாம் ஆண்டவரை நம்புகிறோம், அதுவும் அறைகுறை மனதோடு நம்புகிறோம் என்பது உண்மை அல்லவா? இன்றிலிருந்து நாம் நம்பக் கற்றுக்கொள்வோம். தேவனை நாம் நம்பும்போது நம் இதயத்தை, அதாவது நமது பயத்தை, எதிர் பார்ப்பை, வேதனையை, கண்ணீரை கடவுளின் சமூகத்தில் ஊற்றிவிட வேண்டும். ‘‘வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.’’ (மத்-11:28) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தவர்களாக கடவுளை நம்புவதற்கு நம்மை அர்ப்பணித்து தீர்மானம் எடுப்போம்.

2. பெருமை பாராட்டாதிருங்கள்: (வசனம்-10)

இன்று நமது சபைகளிலும் சங்கங்களிலும், ‘நான் உயர்ந்தவன், அவர் தாழ்ந்த வர்’ ‘நான் பெரியவன், அவர் சிறியவர்’ ‘எனக்கு அமோக ஆதரவு உள்ளது, அவர் நாதியற்றவர்’ என அநேகர் பகட்டாகப் பேசுவதைக் கேட்க முடிகிறது. ஜாதி, பணபலம், அந்தஸ்து என தேவ னுக்கு பிரியமில்லாத பல விஷயங்கள் நம் கிறிஸ்தவ சமதாயத்தில் தலைவிரித்தாடுவதை நாம் பார்க்கமுடிகிறது. ‘‘கொடுமையை நம்பாதிருங்கள், கொள்ளையினால் பெருமை பாராட்டாதிருங்கள், ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதன்மேல் வைக்கா தேயுங்கள்.’’ (வச-10) என்ற ஒரு அருமையான அறிவுரையை விசுவாசிகளாகிய நமக்கு தாவீது இங்கு கொடுக்கிறார். இலகு வேதாகமம் அதை பின்வருமாறு அழகாகக் கூறுகிறது, ‘‘பயமுறுத்தி பறித்தெடுப்பதில் நம்பிக்கை வைக்காதே, களவாடிய பொருட்களை குறித்து பெருமை கொள்ளாதே, உனது செல்வங்கள் அதிகரித்தாலும் உன் இருதயத்தை அவை களின்மேல் வைக்காதே.’’ இது எவ்வளவு உண்மையான கூற்று பாருங்கள். நமக்கு சொந்த மில்லாதவைகளைக் குறித்து நாம் மேன்மைபாராட்டிக்கொண்டு இருக்கிறோம். இறைவ னுக்குக் கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்காமல், நம்மைக் குறித்த வீண் பெருமை களையே பேசுகிறோம். இன்றே, நமது வீண் பெருமைகளை விட்டுவிட்டு நம்மைத் தாழ்த்தி கிறிஸ்துவின் பாதத்தண்டை திரும்புவோம்.

முடிவுரை:

அன்பானவர்களே! கடவுளை நம்பி அவரைக் கனப்படுத்தும் வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம். ‘‘அவனுடைய உயர்ந்த இடத்திலிருந்து அவனைக் கீழே தள்ளி வீழ்த்துவ தற்கு அவர்கள் முழுமையாய் எண்ணங்கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தங்கள் பொய் களில் மகிழ்ச்சி கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் வாய்களினால் ஆசீர்வதிக்கிறார்கள் ஆனால் தங்கள் இருதயங்களிலோ, சபிக்கிறார்கள்.’’ (வச-4, இலகு மொழிபெயர்ப்பு) என்று இல்லாமல், நம் வாழ்வின் சாட்சிகள் வழியாய் தேவனுக்கு பிரியமான வாழ்வு வாழ கர்த்தர்தாமே நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

**Compiled by: Rev. Dr. D. Suresh Rajan, Elder, Methodist Church in India.**

தொகுப்பு: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், ஆயர், இந்திய மெதடிஸ்ட் திருச்சபை.

# வேதாகம போட்டி-140 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) அன்பு சுதந்தரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அரோமா சாத்ராக் TIN
8) ஆர்தர் மாசில்லாமணி CHE
9) அருள்செல்வி VIR
10) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
11) அருண் PPT
12) பங்கஜம் வில்சன் CBE
13) பெல்சி தங்கராஜ் CHE
14) பெனிட்டா பிராங்க்ளின் CHE
15) பியூலா அலெக்ஸ் CHE
16) பியூலா ஜேசுராஜன் PON
17) செலினா பென்சி வில்சன் DR, CHE
18) சந்திராபாய் மாசிலாமணி AVD
19) சந்திரலேகா KAL
20) சந்திரா சாமுவேல் TIN
21) சார்லட் டேவிட் CHE
22) சார்லஸ் ஃபின்னி DR. CHE
23) சிட்டி NOC
24) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
25) கிறிஸ்துதாஸ் GOP
26) கிறிஸ்டி ஆயிட்டஸ் TIN
27) கிறிஸ்டி ஞானராஜ் CHE
28) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
29) டேனியல் தாமஸ் TIN
30) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
31) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
32) தெபோராள் ஆனந்தமணி CNG
33) டெல்பி பாத்திமா CHE
34) தேவமணி ஆபிரகாம் TUT
35) தேவநேசம் ராஜாசிங் CHE
36) டோராபாய் CHE
37) எஸ்தர் D.R. TIN
38) எவாஞ்சலின் கிப்சன் MSK
39) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
40) குளோரா BBC BD TEN
41) ஞானம் ஜெபராஜ் TIN
42) ஞானம் பிலிப் CBE
43) ஞானஜோதி பேரின்பம் VIR
44) ஞானராணி G. PAN
45) கிரேஸ் டேனி PCM
46) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
47) கிரேஸியா ஜெயபால் CHE
48) கிரிசெல்டா செய்லர் CHE
49) ஹெலன் ஜான்சிராணி TIN
50) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
51) ஹெலன் திலக் TUT
52) ஹேமா அஜீத் CHE
53) ஹேமா கேப்ரியேல் MUM
54) ஹெப்சிபா மங்களராஜ் TIN
55) ஹிம்லா ராஜகுமாரி CHE
56) இளவரசி ஜோபிதா CBE
57) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
58) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
59) ஜமீலா செல்வராஜ் CHE
60) ஜேன்ஸ் ANM
61) ஜேன் தர்மராஜ் TIN
62) ஜான்ஸி சந்தியா MAR
63) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
64) ஜெயகுமாரி CBE
65) ஜெபா ஜெயராஜ் AVD
66) ஜெபக்குட்டி மோசஸ் TIN
67) ஜெபசீலி கிளின்டன CHE
68) ஜெபஸ்டின் ஜி. KNR
69) ஜெபா சீனி MKM
70) ஜெமீலா நிக்ஸன் CHE
71) ஜெனித்தா செல்வின் TIN
72) ஜெரின் ஸ்டீபன் CHE
73) ஜெஸி செல்லதுரை CBE
74) ஜெஸி ஜெயக்குமார் TIN
75) ஜெயா ஆல்பர்ட் KUM
76) ஜெயபால் D. ARM
77) ஜோனா ஸ்டீபன் AVD
78 ஜோஸ்பின் ஜெஸி CHE
79) ஜாய்ஸ் பாண்டியன் CHE
80) ஜுலியட் CHE
81) ஜுலியட் ஜெயக்குமார் TIN
82) கலா கிருபாகரன் TIN
83) கலையரசி செல்வராஜ் CHE
84) கஸ்தூரி எலியாஸ் TIN
85) கிருபா சாந்தி AV. CHE
86) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM

## வேதாகம போட்டி-140 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

87) லதா TIN
88) லதா மைக்கேல்ராஜ் CHE
89) லீலா டேவிட் CHE
90) லீலா ஜெபராஜ் THA
91) லீலா ஜோஸப் CBE
92) லில்லி ஜாண்ஸன் CHE
93) லிஸி டென்சிங் TIN
94) மல்லிகா V. CHE
95) மணிமேகலை ஜெயக்குமார் TIN
96) மனோகரம் தனராஜ் NAZ
97) மரியாள் JS TUT
98) மரிய பாப்பா CHE
99) மேரி தேவதாஸ் MDU
100) மேபல் கிறிஸ்டியான் CHE
101) மெஜிலா ஜோஷ்வா TUT
102) மெர்சிபா CBE
103) மெர்சி தனராஜ் CBE
104) மெரிட்டா ஜெயபாலன் TCY
105) மெர்லின் தனசிங் CBE
106) மியூரியல் புஷ்பராஜ் CHE
107) நிக்ஸன் எவர்பிரைட் TIN
108) ஆலிவ் ஜெயபாலன் CBE
109) பாக்யபாய் ஆரோன் TIN
110) பால் தங்கம் CHE
111) பமீலா எட்வின் KAN
112) பெர்சி பால் பொன்சிங் SAW
113) பிங்க்லின் தேவமலர் CHE
114) பிரேமா பூபாலன் AVD
115) பிரேமா ஸ்டாலின் CHE
116) பிரின்ஸ் தயாநிதி CHE
117) பிரின்ஸ்லின் ஷைனி APM
118) பிரிசில்லா தாஸ் CHE
119) பிரிஸ்கில்லாள் சசி CBE
120) ரேச்சல் ஈஸ்டர் VEL
121) ராஜபிரமிளா TPT
122) ராஜ்மேரி சார்லஸ் KER
123) ரமோலா அதிசயராஜ் TIN
124) ராணி பிரபாகரன் TIN
125) ராணி சாமுவேல்ராஜ் CHE
126) ரத்னா டென்னிஸன் CBE
127) ரத்னாவதி பாண்டியன் CHE
128) ரெஜினா விக்டர் TIN
129) ரோஸ்லின் மார்கிரெட் CHE
130) ரோஸி ஸ்டீபன் CHE
131) ரூபவதி நோபிள் TIN
132) ரூபி பாஸ்கர் TPT
133) ரூபி ஜாண் நாடார் MUM
134) ரூபி ஜாண்ஸன் TIN
135) ரூத் ஜாண்ஸன் TIN
136) சாம்பு ஜெயச்சந்திரன MDU
137) சாமுவேல் டேவிட் TPT
138) சாரா பாலசிங் MDU
139) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
140) சரோஜினி எலிசபெத் CHE
141) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
142) செல்வ பென்சி ஆபேல் AP
143) செல்வராணி ஆல்பர்ட் CHE
144) செல்வராணி G CHE
145) செல்வி அமிர்தராஜ் CHE
146) ஷாலி எடிசன் CHE
147) சாந்தி ஆல்பர்ட் PCM
148) சாந்தி ஜெபக்கனி KAL
149) சாந்தி ரோஸ் CBE
150) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
151) ஷீபா சாம்ஸன் CHE
152) ஷீலா சாமுவோல் CUD
153) சவுந்தரம் சாலமோன் CHE
154) சௌந்தரி பிரபாகர் PPT
155) ஸ்டெல்லா டேவிட் TUT
156) ஸ்டெல்லா கனகராஜ் CHE
157) ஸ்டெல்லா சூசைய்யா TUT
158) சுகிர்தா ஆல்வின் CHE
159) சுகிர்தா சின்னதுரை TIN
160) சுஜாதா சாமுவேல் CHE
161) சுமித்ரா B.
162) சுசீலா தியோடர் TCY
163) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
164) தபித்தா நரேஷ் CUD
165) தாரா மாணிக்கம் CHE
166) தெல்மா ஸ்டேன்லி MDU
167) வனஜா ஹெர்பர்ட் TIN
168) வசந்தா அன்பன் TIN
169) வசந்தி கருணாகரன் CHE
170) வசந்தி வாசன் CHE
171) விஜயராணி A. CHE
172) விஜி டேனியல் CHE
173) வினோலியா ஜேம்ஸ் KPT
174) வைலட் கிறிஸ்டோபர் TIN
175) வைலட் சைரஸ் CHE
176) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW



PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூலை – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 08–07–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 15–07–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 22–07–2022 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

---

# திருச்சபை வரலாறு

**2000ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு**

## History of Christianity In India from 1st to 21 Century

**இந்த இதழில்**
**(ஜூலை–2022)**
**ஆரம்பம். பக்கம் 16**

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு
(1முதல் 21ம் நூற்றாண்டு வரை)

## புதிய கட்டுரைத் தொடர்

இந்தமாத இதழில் ஆரம்பமாகிறது.

(பக்கம் 16 பார்க்கவும்)

**கட்டுரை ஆசிரியர்**
**அறிவர். திருமதி. சலோமி மனோகர்**
ஓய்வுபெற்ற உதவிப் பேராசிரியர், தூய. போப் கல்லூரி சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்.

படித்துப் பயனடைவீர்!! ஆசீர்வாதம் பெறுவீர்!!

# வேதாகம போட்டி-141

வேதபகுதி யோபுவின் சரித்திரம்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் ஜூலை-25

1. வறட்சியும் உஷ்ணமும் எதைப் பட்சிக்கும்?
2. காட்டுக்கழுதைக்குட்டிக்கு ஒப்பாக பிறந்திருந்தாலும் பெருநெஞ்சுள்ளவன் யார்?
3. முதியோர் பேசட்டும், வயதுசென்றோர் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தது யார்?
4. முத்திரையிடப்பட்ட களிமண்போல் வேறே ரூபம் கொள்ளும் - இது என்ன?
5. முதியோரிடத்தில் எதுவும், வயது சென்றவர்களிடத்தில் எதுவும் இருக்கும்?
6. இரும்பு எதிலிருந்து எடுக்கப்படும்? செம்பு எதில் உருக்கி எடுக்கப்படும்?
7. தேவன் எதற்கு புத்தியைக் கொடாமல், ஞானத்தை விலக்கிவைத்தார்?
8. ராமின் வம்சத்தானான பூசியனாகிய பரகெயேலின் குமாரன் பெயர் என்ன?
9. 'தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்' என்று சொன்னது யார்?
10. கற்களைக் குடைவது எது? பூமியின் தூளில் முளைத்ததை மூடுவது எது?
11. ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக்கொண்டு சாம்பலில் அமர்ந்தது யார்?
12. நிர்மூடனைக் கொல்லுவது எது? புத்தியில்லாதவனை அதம் பண்ணுவது எது?
13. தேவன் நீர்த்துளிகளை எதைப்போல் ஏறப்பண்ணுகிறார்?
14. பெலன் இடுப்பிலும், வீரியம் வயிற்றின் நரம்புகளிலும் இருக்கிறது - இது என்ன?
15. யோபுவுக்காக பரிதபிக்கவும் ஆறுதல் சொல்லவும் வந்த சிநேகிதர் எத்தனைபேர்?
16. எமீமாள், கெத்சீயாள், கேரேனாப்புக் ஆகிய இவர்கள் யார்?
17. பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் - என்றது யார்?
18. அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாய் இருக்கிறது - அது என்ன?
19. தன் வாயைத் திறந்து தன் பிறந்தநாளைச் சபித்தது யார்?
20. எக்காளம் தொனிக்கும்போது நிகி-என்று கனைப்பது எது?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

GOD OF RETRIBUTIONS EL NEKAMOT ADONAI

## நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர்

EPISODE - 38 ஏல் நெக்காமோட் அதோனாய் பாகம் - 38

நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும். சங்–94:1

And did all drink the O Lord God, to whom vengeance belongeth; O God, to whom vengeance belongeth, shew thyself. Psalm-94:1

தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்கிற (சங்-982) தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஜூலை-மாத நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

யாக்-3:18 நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

ஏசாயா-61:11 பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைவிப்பது போலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும், துதியையும் முளைக்கப்பண்ணுவார்.

தேவபிள்ளைகளாகிய நாமும் சில காரியங்களில் நீதி கிடைக்கவில்லையே என்ற அங்கலாய்ப்புடன் இருக்கிறோம். நொறுங்கிய உள்ளத்துடன் இருக்கும் நம்மைப்பார்த்து, ‘‘கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது’’ என்கிறார் ஆவியானவர்.

1பேதுரு 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிளைக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். எந்த மனிதரும் நம்மைக் குற்றஞ்சாட்ட முடியாது.

வெளி 22:11 நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன் - என்கிறார்.

ஜெபம்: எங்களை வழிநடத்துகிற நீதியும் சத்தியமுமான தேவனே, உமது வழிகளுக்காக ஸ்தோத்திரம். நீதியைச் சரிக்கட்டுகிறவரே, உம்முடையவர்களை மீட்கும் வருடத்துக்காக ஸ்தோத்திரம். மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்கிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னை சிங்காரித்துக்கொள்கிறதற்கும் ஒப்பாக, இரட்சிப்பின் வஸ்திரங்களை எங்களுக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எங்களுக்குத் தந்தவரே, இயேசுவின் நாமத்தில் அதை நாங்கள் சுதந்தரித்துக்கொள்கிறோம். ஆமென் பிதாவே. அல்லேலூயா. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–134*. . .

# விசுவாசிக்கிறவர்களுக்கு இழப்பும் ஆசீர்வாதமே

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.


சகோ. அசரியா

டென்மார்க் தேசத்திலே தேவனுக்கு பயந்த பென்ஸன் என்னும் ஊழியக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் சுவிசேஷ ஊழிய பணிகளோடு குதிரை வளர்ப்பிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். ஓருநாள் பென்ஸன் நேசித்து வளர்த்துவந்து ஒரு அழகிய குதிரை காணாமல் போய்விட்டது. அக்குதிரை பென்ஸனுடைய வீட்டிற்கு அருகாமையிலுள்ள குதிரைகள் நிறைந்த காட்டிற்குள் சென்று மற்ற குதிரைகளுடன் நட்புடன் வாழத் தொடங்கியது. தாங்கள் நேசித்த குதிரை காணாமற்போனதை எண்ணி பென்ஸனின் குடும்பத்தார் மிகவும் கவலையுற்றனர், ஆனால் பென்ஸனோ இதைப்பற்றி கவலை கொள்ளவில்லை. எவ்வித இழப்பையும் நன்மையாக இயேசு கிறிஸ்து மாற்றிவிடுவார் என்ற நம்பிக்கையுடன், விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா-28:16) என்ற வசனத்தை விசுவாசத்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

நாட்கள் கடந்தன, பென்சனுடைய விசுவாசத்திற்கு பலனாக ஒரு அற்புதம் நடந்தது. சுமார் ஒரு மாதம் கழித்து, காணாமற்போன குதிரை திரும்பிவந்தது, தனியாக அல்ல ஒன்பது அழகிய செழுமையான குதிரைகளுடன் திரும்பிவந்தது. காட்டில் தனக்கு கிடைத்த நண்பர்களையும் தன் எஜமானிடத்திள்கு அழைத்துவந்துவிட்டது. இதைக்கண்ட பென்ஸனும் அவருடைய குடும்பத்தினரும் மகிழ்ச்சியில் ஆடிப்பாடினர். இயேசு கிறிஸ்து, காணாமற்போன குதிரையுடன் வேறு 9-குதிரைகளைக் கொடுத்தார் எனக்கூறி நன்றிசொல்லி எல்லா குதிரைகளையும் நேசித்து வளர்க்க ஆரம்பித்தனர்.

பென்ஸனும் தான் ஊழியம் செய்த இடங்களிலெல்லாம் இதை அறிவித்து, ‘‘நம் வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளையெல்லாம் ஈடுகட்டி அவற்றிற்குப்பதிலாக நமக்கு ஆசீர்வாதங்களை பன்மடங்காகக் கொடுக்க இயேசு கிறிஸதுவால் மட்டுமே முடியும், எனவே விசுவாசிக்கிறவர்களுக்கு இழப்பும் ஆசீர்வாதமே’’ என ஆணித்தரமாக தம் அனுபவத்தின் வழியாக சாட்சி பகர்ந்தனர்.

பிரியமானவர்களே! நம் வாழ்வில்கூட பல சமயங்களில் நமது உழைப்வில், நமது பிரயாசங்களில் ஆசீர்வாதங்களுக்குப் பதிலாக பலவிதமான இழப்புகளை நாம் சந்திக்க நேரிடலாம், ஆனாலும், நாம் விசுவாசத்தில் உறுதியாயிருக்கும்போது இயேசு சுவாமி நம்மை ஆற்றித் தேற்றி, நம்முடைய இழப்புகளையெல்லாம் பன்மடங்கில் ஆசீர்வாதங்க ளாக மாற்றி நம்மை வழிநடத்துவார் என்பதில் சந்தேகமில்லை.

தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறது. எஸ்றா–8:22
உமக்கு பயந்தவர்களுக்கு உமது நன்மை பெரிதாய் இருக்கிறது. சங்–31:19
சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. சங்–34:10
உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்–84:11

EPISODE

INTRODUCTION

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
பொதுவான முன்னுரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! அகில உலக கிறிஸ்தவத் திருச்சபை உருவாகி வளர்ச்சி யடைந்த விதம் குறித்து கடந்த 5-ஆண்டுகளாக பல்வேறு தலைப்புகளில் உங்களுக்கு வழங்கி இரண்டாயிரமாண்டு கிறிஸ்தவ வரலாற்றை நீங்கள் புரிந்துகொள்ள உதவினோம் என்று நம்புகிறோம். அதே நம்பிக்கையின் மற்றொரு முயற்சியாக இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றுக் குறிப்புக்களை வழங்கும் நோக்குடன் '2000-ஆண்டு வரலாறு 2-ம் வருகைக்கு தயாராகு' என்ற புதிய கட்டுரைத் தொடரை இரட்சிப்பு செய்தி மலரில் மாதந்தோறும் வழங்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கே மகிமை உண்டாவதாக.

இந்தியாவின் வரலாறு குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆனால் இந்தியாவில் கிறிஸ்தவம் தோன்றி வளர்ந்தது குறித்ததான வரலாறு நம்மில் சிலருக்கு ஓரளவு தெரிந்திருந் தாலும், அனேகர் அதை முழுமையாக அறியாதிருக்கிறோம். ஆகையால், இத்தொடர் மாதந தோறும் இதை வாசிக்கிற அன்பர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கர்த்தருக்குள் உறுதியாய் நம்புகிறோம்.

திருச்சபை வரலாறு அறிய வேண்டியதின் அவசியம் என்ன?

1. கர்த்தர் தமது திருச்சபையை எவ்வாறு நாட்டி அதை நடத்திக் கொண்டு வந்தார் என்பதை விளக்குகிறது.

2. கிறிஸ்தவ சத்தியங்கள் திருச்சபை வரலாற்றோடு தொடர்புடையவையாக இருக்கிறபடியால் வேதத்தை சரியாக புரிந்துகொள்ள உதவும்.

3. திருச்சபை வரலாறு நம் விசுவாசத்தை வளர்க்கவும் பலப்படவும் உதவுகிறது.

4. திருச்சபை வளர்ச்சியால் உருவாகிய விசுவாசம் நாம் சத்தியத்தில் நிலைத் திருக்கவும் நம்முன்னோர் சென்ற நல்வழியில் நாமும் செல்ல உதவுகிறது. 5. திருச்சபை வரலாறு, தவறான போதனைகளையும் தடைகளையும் இனம் கண்டு விவேகத்துடன் அவற்றைத் தவிர்த்து வெற்றி வாழ்வு வாழ உதவுகிறது

6. திருச்சபை வரலாறு எதிர்கால சூழல்களை நமக்கு உணர்த்தி உற்சாகமாய் கிறிஸ்துவின் பாதையில் நடக்க திடநம்பிக்கை ஊட்டுகிறது.

இந்திய கிறிஸ்தவத்தின் வரலாற்றை பின்வரும் தலைப்புகளில் தொகுத்து வழங்குகிறோம். ஜெபத்துடன் படியுங்கள். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

பகுதி - 1 இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்: 1. தாமஸ் பாரம்பரியம் - தென்னிந்தியா 2. தாமஸ்-பாரம்பரியம் - வடஇந்தியா 3. போர்த்துகீசியர்-கட்டுப்பாடு 4.இலக்கியத் தொல்லி யல் சான்றுகள்

பகுதி - 2 இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவம்: 1. கிறிஸ்தவர்களின் இந்திய பயணவழிகள் 2. ஒரு இந்திய ஆவணம் 3. மதகுரு பயணிகள் 4. பொது-மனித சாட்சி 5. பிந்தைய இடைக் காலப் பயணிகள்

பகுதி - 3 ஐரோப்பிய - ஆசிய தொடர்பும் மோதலும்: 1. கிழக்கை நெருங்கிய மேற்கு 2. போர்த்துகீசியர்கள் வருகை 3. முகலாயர் வருகை 4. மஹா-அக்பரும் போர்த்துகீசியரும் 5. போர்த்துகீசியரின் போட்டியாளர்கள்

பகுதி - 4 கிறிஸ்தவப்பணியின் ஆரம்பம்: 1. போர்த்துகீசிய பேட்ரோனேஜ் 2. கோவாவில் புனிதப் பணிகள் 3. இந்திய மனமாற்றத்திற்கான நல்முயற்சி 4. மதச்சார்பற்ற குருக்கள் 5. போர்சுகீசியர் மற்றும் கிறிஸ்தவம் அல்லாத மதங்கள்

பகுதி - 5 ஜெசுவைட்ஸ் இந்திய திருச்சபை: 1. ஜெசுவைட்ஸ் - பிரான்சிஸ் சேவியர் வருகை 2. கோரமண்டல் கடற்கரையில் திருச்சபை 3. கோவாவில் கிறிஸ்தவம் 4. வெற்றி-தோல்வி கள் 5. பிரான்சிஸ் சேவியரின் கடைசி நாட்கள்

பகுதி - 6 அக்பர் மற்றும் ஜேசுவைட்ஸ்: 1. தேடுதலின்-ஆவி 2. அக்பர்-படை யெடுப்பு - ஜெசுவைட்ஸ் ஏமாற்றம் 3. இரண்டாம்ம் மற்றும் 3-ம் மிஷன் 4. அனைத்தும் நன்மை பயக்கவில்லை 5. மஹா-அக்பரின் கடைசி நாட்கள்

பகுதி - 7 ரோம மற்றும் தாமஸ் கிறிஸ்தவம்: 1. மேற்கு - கிழக்கு ஆயர்கள் 2. சீரியா மற்றும் பிற ஆயர்கள் 3. மர்மமான மார் ஆபிரகாம் 4. மெனெஸஸ் மற்றும் டயம்பர் சினாட்

பகுதி - 8 ஒளியும் நிழலும்: 1. கிறிஸ்தவ தொண்டு செயல்வடிவில் 2. போர்த்துகீசிய அதிகாரிகள் தலையீடு 3. திருச்சபை கவுன்சில்கள் 4. கோவாவின் சுற்றுப்புற அருட்பணிகள் 5. கோரமண்டல் அருட்பணி நீட்டிப்புகளின் விளைவுகள்

பகுதி - 9 17-ம் நூற்றாண்டு இந்திய கிறிஸ்தவம்: 1. ஜஹாங்கீர் - ஷாஜகான் - அவுரங்கசீப் கால கிறிஸ்தவம் 2. ஐரோப்பிய மிஷனரிகள் 3. ராபர்ட்-டி-நோபிலி - மதுரை மிஷன் 4. டி-நோபிலியின் எதிரிகள் - தற்காப்பு - எழுத்துப்பணி 6. நோபிலிக்குப் பிந்தைய அருட்பணிகள்.

பகுதி - 10 மீண்டும் தோமா கிறிஸ்தவர்கள்: 1. பிரான்சிஸ் ராஸ் மற்றும் முட்களின் கிரீடம் சபை 2. கலகம் - பிளவு, சமரச முயற்சிகள் 3. டச்சுக்காரர்கள் தலையீடும், குழப்பத்தின் மத்தியில் ஸ்திரத்தன்மை 4. நூற்றாண்டின் இறுதியில.

பகுதி - 11 பிற ரோமன் கத்தோலிக்க பணிகள்: 1. முதல் அப்போஸ்தல பிரதிகுரு 2. கேத்தே-திபெத்,-ஃபிஷர்-கோஸ்ட் மிஷனரிபணி 3. 17-ம் நூற்றாண்டு-பிற மிஷனரி நிறுவனங்கள்

பகுதி - 12 இந்தியாவில் ரோமன் கத்ததோலிக்கம் அல்லாத கிறிஸ்தவம்

1. ஆங்கிலிக்கன் சபை 2. இந்தியாவில் டச்சு கிறிஸ்தவம் 3. பிற கிறிஸ்தவ சபைகள் 4. லுத்தரன், சி.எஸ்.ஐ, சி.என்.ஐ, மெதடிஸ்டு, பாப்டிஸ்டு, பெந்தேகோஸ்தே மிஷன், அசெம்பிளி-ஆப்-காட் சபை 5. சுதந்திர சபைகள்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
Thiruvanmivur, Chennai, South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன் போர் மற்றும் இலங்கை, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் பொருளாதார சீர்கேடு - மக்கள் போராட்டம் முடிவுக்கு வர... பெருந்தொற்று, புயல்-மழை, காட்டுத் தீ போன்ற இயற்கை பேரிடர்களி லிருந்தும் பிரிவினை - பயங்கரவாதங்களிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... ஒன்றிய அரசு மாநிலங்களுக்குள் நடுநிலையாக செயல்பட... விலைவாசிகள் குறைய... அனைத்து மாநிலங்களுக்கும் சேரவேண்டிய நிலுவைத் தொகை மற்றும் மாநிலங்களுக்கான இழப்பீட்டு நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க... குடியரசுத் தலைவர் தேர்தல் நியாயமான முறையில் நடைபெற... புதிய குடியரசுத் தலைவருக்காக...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... கொரோனா 4ம் அலை வராதிருக்க... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி ஒற்றுமையாய் வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள் பாது காக்கப்பட... புயல் - மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகளிலிருந்து மக்கள் மீண்டுவர...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃ.ப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃ.ப்னா, ஜெனிபர், கி.ஃ.ப்ட்லின், ஜோயின்ஸ், ஜான்ஸி ப்ளோரா, ஜேனிஸ், ஜெஸிக்கா, சிந்தியா பிரகாஷ், ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. ஃ.பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. ஈவ்லின் சிப்பெர், திருமதி. எபனேசர், திரு. சாம் எலியேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு. அசரியா ஞானதாஸ், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தின பாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி. கிரெடா ஐசக், திருமதி. ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. அலீஸ் ரெஜினாபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. சரஸ்வதி கிறிஸ்து தாஸ் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. ஜாஸ்மின் ஞானதாஸ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்பத்துக்காக...

9) ஆண்டிறுதித் தேர்வில் விரும்பிய முடிவுகள் கிடைக்காத, வெற்றியை தவறவிட்ட நம் பிள்ளைகள் கர்த்தரின் தைரியத்தைப் பெற்று ஜெபத்துடன் சிறந்த வெற்றியை அடைய...

10) திருமதி. பிரின்ஸி, திருமதி. மெர்லின், திருமதி. கவுலின், திருமதி. லெஷ்மி ஆகியோரின் சுகத்துக்காக... சுக பிரசவத்திற்காக...

# வேதாகம போட்டி-140 (எஸ்தர்)

## சரியான விடைகள்

1. ஆமானை எஸ்தர்:-3:2
2. எஸ்தரிடத்திற்கு எஸ்தர்:-5:2
3. பிக்தானும், தேரேசும் எஸ்தர்:-2:21
4. சிங்காரத்தோட்டம் எஸ்தர்:-1:5
5. மொர்தெகாய் எஸ்தர்:-2:7
6. அரமனை-வாசலுக்குள்-எஸ்த:-4:2
7. காலவர்தமான-புத்தகம்-எஸ்த:-6:1
8. அகாஸ்வேரு ராஜா எஸ்தர்:-1:1
9. எஸ்தர் எஸ்தர்:-4:15,16
10. ஐநூறு பேரை எஸ்தர்:-9:6
11. ஆமான் எஸ்தர்:-3:6
12. வஸ்தி எஸ்தர்:-1:9
13. எஸ்தர் எஸ்தர்:-2:7
14. எஸ்தர் எஸ்தர்:-8:2
15. ஆமான்-குமாரர்-10பேர் எஸ்த:-9:13,14
16. ராஜா-எஸ்தர்-மொர்தெகாய் எஸ்:-8:7
17. மொர்தெகாய் எஸ்தர்:-10:3
18. பிரதானிகள் எஸ்தர்:-1:11
19. ஆமானை எஸ்தர்:-7:10
20. சிரேஷ் எஸ்தர்:-5:14, 6:13

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## Liturgical Calendar July-2022

| Date | Day | Feast of the Saint |
|---|---|---|
| 1st July - 2022 | Friday | Bishop Martyr St. Oliver Plunk |
| 6th July - 2022 | Wednesday | Virgin Martyr St. Maria Goretti |
| 20th July - 2022 | Wednesday | Bishop Martyr St. Apollinaris |
| 22nd July - 2022 | Friday | St. Mary Magdalene |
| 25th July - 2022 | Monday | St. James the apostle |
| 29th July - 2022 | Friday | St. Martha, St. Mary and St. Lazarus |

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 8th July 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. ரஷ்ய பத்திரிக்கையாளர் டிமிட்ரி முராடோவ், கடந்த ஆண்டு தான்-பெற்ற நோபல் பரிசை விற்று கிடைத்த, 103-மில்லியன் டாலர் பண-உதவியை உக்ரைன் போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மறு வாழ்வுக்காக யுனிசெ.ஃ.ப்-க்கு வழங்கினார்.

2. தாராப்பூரிலுள்ள இந்தியாவின் முதல் அணுமின் நிலை யத்தில் கடந்த 50-ஆண்டுகளில் எரிக்கப்பட்ட 3452-எரிகோல்கள் 2-மையங்களில் பாதுகாக்கப்படும் நிலையில், மேலும் 2-புதிய எரிகோல்கள் சேமிப்பு மையங்கள் தேவை என தகவல்.

3. மாமல்லபுரத்தில் ஜூலை 28-முதல் நடைபெறும் செஸ் ஒலிம்பியாடில் பங்கேற்கின்ற வீரர்கள் 2500-பேருக்கு தலா ரூ.2 லட்சத்துக்கு மருத்துவக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை தகவல்.

4. கிரிப்டோகரன்சிகள் கடும் சரிவு கண்டுள்ள நிலை யில், பிட்காயின் போன்றதான கரன்சிகளில் முதலீடு செய்த பணத்தை திருப்பித்தர பரிவர்த்தனை நிறுவ னங்கள் மறுப்பதால் கிரிப்டோகரன்சி முதலீட்டாளர் கள் அச்சத்தில் உள்ளனர்.

5. மாமல்லபுரம் ‘போர் பாய்ண்ட்ஸ்’ அரங்கில் நடை பெறும் ‘செஸ்-ஒலிம்பியாட்’ போட்டிக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக அரங்கம் அருகே உயர் அழுத்த தடத்தில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தது தமிழ்நாடு மின்-வாரியம்.

Posted on: 8th July 2022

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.